# அறிவாலயம் கண்ட கலைஞருக்கு, நினைவாலயம் எழுப்பிய தலைவர் தளபதி!



பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்டு, அண்ணன், தம்பிகள் என்ற உறவுமுறையோடு, சமூக சீர்திருத்த கடமையாற்றிய நமதியக்கத்தில், எத்தனையோ தியாகிகள், தலைவர்கள், மேதைகள் நிறைந்திருந்தனர்.

காலவெள்ளத்தில், வறுமை, நோய், முதுமை என்பவை வாட்டிய காரணங்களால் அவர்கள் நம்மை விட்டு பிரிந்த நாட்களில், நமது தலைவர்கள் எழுப்பிய கண்ணீர் புகழஞ்சலிகள் மறைந்த மாமனிதரின் பெயரை, புகழை மேலும் மக்களிடத்தில் கொண்டு சேர்த்தது.

கழகம் தொடங்கிய ஆரம்ப நிலையில் கொடியவனின் கொலைபாதக செயலுக்கு பலியான தூத்துக்குடி கே.வி.கே.சாமியின் மறைவு துயர செய்தி கேட்டு, துடிதுடித்து, **“தென்பாண்டி கடல் முத்தே! தீர்ந்ததோ உந்தன் வாழ்வு!”** என்று உணர்வு கொப்பளிக்க புகழஞ்சலி தீட்டினார் தலைவர் கலைஞர்.

இன்னும் இயக்கத்தோழர்களின் நினைவில் நிலைத்திருக்கிறார் மாவீரன் கே.வி.கே. சாமி.

தனக்கு அரசியலில் பயிற்சி தந்து ஆளாக்கி, தனது சிந்தையனு ஒவ்வொன்றிலும் நீக்கமற நிறைந்திருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது,

**“கண்மூடிக்கொண்டு நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்துள்ளேன்.**

**இன்று மண்மூடிக் கொண்டுன்னை பார்க்காமல் தடுப்பதென்ன கொடுமை?”** என்று மனம் பதறிக் கதறினார். அண்ணா அவர்கள் துயில்கொள்ளுமிடத்தில் அணையா விளக்கு நினைவகம் அமைத்து, **“எதையும் தாங்கும் இதயம் இங்கே, உறங்குகிறது!”** எனும் வாசம் பதித்தார். பிரதான சாலைகளுக்கு அண்ணாவின் பெயர், அவர் பெயரில் விருதுகள், மாவட்டம், நூலகம் என அணையா விளக்கின் புகழ் பரப்பிய அற்புத விளக்காய் நம் தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் மறைவின்போது, அவருக்கு அரசு மரியாதை தர ஆட்சியையும் இழக்க துணிந்த தலைவர் கலைஞர் அவர்கள்,

**“இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்த புரட்சிக்காரரை இழந்து விட்டோம்.**

**அவர் தனது பயணத்தை முடித்துக் கொண்டார் நாம் தொடர்வோம்”** என்று ஐயாவின் புகழ் போற்றினார். நாடெங்கும் அவருக்கு சிலைகள் அமைத்து ஐயாவுக்கு பெருமை சேர்த்தார்.

பெருந்தலைவர் காமராஜர் 1975-ல் மறைந்தபோது தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய கடமையை அன்றைக்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ராஜாராம் நாயுடு, **“காமராஜருக்கு ஒரு சகோதரன் இருந்திருந்தால் கூட இப்படி செய்திருப்பாரா? என்பது சந்தேகமே! இதை நான் எங்கும், எப்போதும் நன்றியோடு பேசுவேன்”** எனப்பேசியது இன்றும் சட்டப்பேரவை பதிவில் இருக்கிறது.

அதோடு பெருந்தலைவருக்கு மணிமண்டபம் ஏற்படுத்தி, அன்று காங்கிரஸ் பிளவு பட்டிருந்த நிலையில் அவர் பெரிதும் நேசித்த பிரம்மாண்டமான இராட்டையை மணிமண்டபத்தின் முகப்பில் இடம் பெறச் செய்தார். அவரது பிறந்தநாளான ஜூலை 15-ந்தை **‘கல்வி வளர்ச்சி நாளாக’**வும் அறிவித்தார். காமராஜர் வாழ்ந்து மறைந்த சென்னை திருமலைப்பிள்ளை சாலையில் அமைந்துள்ள இல்லத்தை அரசு நினைவு இல்லமாக்கினார்.

தனது இளவேனிற் காலத்து இதயம் நிறைந்த நண்பர் கவியரசு கண்ணதாசன் மறைந்தபோது, **“ஆயிரங்காலத்து பயிர் நமது தோழமையென கனவு கண்டோம்.**

**அறுவடைக்கு யாரோ வந்தார்.**

**உன்னை மட்டும் ஏன் அறுத்துச் சென்றார்.**

**நிலையற்ற மன முனக்கு. ஆனால் நிலை பெற்ற புகழுனக்கு!**

**இந்த அதிசயத்தை விளைவிக்க உன்பால் தமிழன்னை துணையிருந்தால்!”** எனக் கண்ணீர் மல்க முரசொலியில் கவிதாஞ்சலி தீட்டினார். தனது ஆட்சி காலத்தில் கவியரசருக்கு மணிமண்டபமும் நிறுவி, மாபெரும் கவிஞனுக்கு மங்கா புகழேற்பட வழிவகுத்தார். இதனால் தானோ, என்னவோ, கண்ணதாசன் ஒருமுறை பேசும் போது, “ **ஒருவர் யார் காலத்தில் வேண்டுமானாலும், வாழலாம். ஆனால் சாகும் போது கலைஞர் ஆட்சி காலத்தில் சாக வேண்டும்”** என்று.

தலைவர்கள் மட்டுமின்றி தளபதிகளாகத் திகழ்ந்தோருக்கும் தலைவர் கலைஞரின் பேனா கண்ணீர் காவியங்களை படைத்தது. சென்னை மேயராக திகழ்ந்த மைனர் மோசஸ் மறைவிற்கு, “ **அந்த சிறுத்தை உலவிய சிறையில் நானுமிருந்தேன் என்பதை எண்ணி, எண்ணி, பெருமையடைகிறேனெ”**ன்று, மறைந்த தியாகி மைனர் மோசஸ் அவர்களுக்கு பெருமை சேர்த்தார்.



**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
கழகக் கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்

தலைவர் கலைஞர் அவர்களின் நெஞ்சிற்கினிய தம்பியரில் ஒருவராய் திகழ்ந்த இள வயது பாராளுமன்ற உறுப்பினர் கம்பம் நடராசன் மறைந்த போது, பேரதிர்ச்சியிலிருந்து மீளாமல், **“போய்விட்டாயா? போர்வாள் மீசைக்காரா?”** எனத் தலைப்பிட்டு எழுதிய கடிதத்தில், “நாற்பத்தைந்து கூட ஆகவில்லை நடராச இளவலுக்கு வயது. அதற்குள் என்ன அவசரமோ அந்த சாக்காட்டு சனியனுக்கு! நம் இயக்கப் பூக்காட்டையல்லவா மிதித்து துவைத்து விட்டது!

உடன்பிறப்பே! என்னை அழவிடு! அழுதால் தான் என் இதயகனம் கொஞ்சமாவது குறையும்! அதனால் என்னை தடுக்காதே! அழவிடு! கதறி அழவிடு! அழுவதுதான் எனக்கு நானே வழங்கிக் கொள்ளும் ஆறுதல். என்று கண்ணீரில் கரைந்தார்.

தலைவர் கலைஞரின் மனசாட்சியாக, முன்னேற்றக் கழகத்தின் முக்கிய மூளையாகத் திகழ்ந்த மாமேதை ஐயா மாறன் அவர்கள் மறைவின் போது, மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே என்றெல்லாம் பேசிப் பேசி ஆறுதல் காணாமல், அவரின் படத்திறப்பு நிகழ்வின் போது, இங்கு எல்லோரும் இருக்கிறீர்கள். ஆனால் **“உள்ளேன் ஐயா!”** என்று சொல்ல கண்மணி மாறன் இல்லையே என்று மாளாத்துயர் கொண்டார்.

இப்படி தலைவர்கள், தளகர்த்தர்கள், தியாகிகளின் புகழை ஏற்றிப் போற்றிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு தான் திராவிட மாடல் ஆட்சியின் பேரரசர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியவர்களால் சென்னை மெரினா கடற்கரையில் அறிவுலக மேதை அண்ணா துயில்கொள்ளும் நினைவகத்தையொட்டி அமைக்கப்பட்ட தலைவர் கலைஞர் நினைவகம் இன்று (பிப்ரவரி 26) மாலை 7 மணிக்கு திறக்கப்படுகிறது.

பெரியார் என்ற பிளாட்டோவுக்கு அரிஸ்டாட்டிலாய் அமைந்தார் பேரறிஞர் அண்ணா. அந்த அண்ணா எனும் அரிஸ்டாட்டிலிற்கு அலெக்சாண்டர் எனும் மாணவனாய் அமைந்தவர் தலைவர் கலைஞர்.

எத்தனை, எத்தனை நினைவு சின்னங்கள், காப்பிய கட்டிடங்கள், விண்ணைத் தொடும் வெண்கலச் சிலைகள், பூம்புகார் கலைக் கூடம், அங்கு ஏற்றமிகு எழில்நிலைமாடம், வள்ளுவருக்கு கோட்டம், சிலை, வெள்ளையரை எதிர்த்து புரட்சிக்குரல் எழுப்பிய வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனுக்கு, மதுரை மாநகரில் சிலை, என்று நாட்டிற்குழைத்த நல்லோருக்கெல்லாம் நன்றிக்கடனாக ஏற்றமிகு நினைவுப் பெருமை ஏற்படுத்திய நிகரற்ற முதல்வர் நமது தலைவர் கலைஞர்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆளுமை, ஆற்றலை முற்றிலும் உணர்ந்ததால் தானே, தான் ஆட்சியில் இருந்த காலத்தில் சட்டப்பேரவையில் குடியரசுத் தலைவர் சஞ்சீவரெட்டி அவர்களை கொண்டு திறக்கவிருக்கும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் படத்தின் கீழே எழுத பொறுத்தமான வாசகத்தை சொல்லுங்கள் என்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் நம் தலைவர் கலைஞர் அவர்களிடம் கேட்க, தலைவரும், **“உழைப்பே, உயர்வு தரும்!”** எனும் வாசகத்தை எழுதித் தந்தார்.

மறைந்தும், மறையாமல் நமது இதயங்களில் ஒப்புயர்வற்ற ஓவியமாய்! உயர்தனிக் காவியமாய் விளங்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவகத்தை நமது உயிரனைய தலைவர் தளபதியவர்கள் திறந்து வைக்கிறார்.

மகன் தந்தைக்காற்றும் உதவி எனும் குறள் நெறி படி.

**வடபுலத்தில், டெல்லி பட்டினத்தில் மாகத்மா காந்தி அவர்களுக்கு அமைக்கப்பட்ட ராஜ்காட் நினைவகம், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவகமான சாந்திவனம், இந்திரா காந்தி அவர்களின் நினைவிடமான சக்திஸ்தல், ராஜிவ்காந்தி அவர்களின் நினைவிடமான வீர் பூமி இவையெல்லாம் சுற்றுலா தளங்களாகி அந்தத் தலைவர்களின் புகழிற்கு சாட்சி சொல்வதுபோல், தென்னகத்தின் பெருமையை, கீர்த்தியை, வெற்றியை, சுயமரியாதையை, ராஜதந்திரத்தை, தனியொருவாராக டெல்லி தலைநகருக்கு அச்சத்தை ஏற்படுத்தி, உறவுக்கு கைகொடுத்து, உரிமைக்கு குரல் கொடுத்த உத்தம தலைவர் கலைஞர் அவர்களின் நினைவகமும் பன்னெடுங்காலமாக அவரது அளவிலா புகழை பறைசாற்றும். அந்த அதிசயத்தை, ஏற்படுத்தி, சென்னை வருவோரெல்லாம் சென்று பார்த்து தலைவர் கலைஞர் அவர்களை மேலும் அறிந்திடவும், அண்ணாவின் நினைவகமும், புதுமை பெற்று புகழொளி பரப்பிட வழிவகை செய்துள்ளார் நமது வரலாற்று முதலமைச்சர் தமிழினத் தளபதியவர்கள்.**

வரலாற்றில் நிறைந்திருந்த தலைவர்கள் மத்தியில் வரலாறாய் மாறிப்போன நமது தலைவர்கள் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நினைவகங்கள் திறக்கப்படும் இந்நாளில் அவர்களின் பெரும்புகழ் ஓங்குக! என ஆர்ப்பரிப்போம்!

அந்த நினைவகங்களை தனது சிந்தையில் நினைத்து, நிறுவிய முதலமைச்சருக்கு நன்றி சொல்வோம்!


ஆமாம் தலைவா!

இந்த தமிழினம் உங்களுக்கு எவ்வளவோ நன்றிக் கடன் பட்டுள்ளது!

வாழ்க அண்ணா! வாழ்க தலைவர் கலைஞர்!

வெல்க நமது திராவிட பேரரசர் தளபதியவர்கள்!

## கடற்கரையில் சென்னையில் கூடுவோம்!



பொலிவுற மின்னும் கலைஞர் நினைவிடம்
புதுப்பிக்கப் பட்ட அண்ணா நினைவிடம்
தலைவர் “தளபதி” திறந்து வைத்திடும்
தனிப்பெரும் நிகழ்ச்சி சரித்திரப் புகழ்பெறும்!

**கலைஞர்,அண்ணா திருப்புகழைப் பாடுவோம்!**
**கடற்கரையில் சென்னையிலே கூடுவோம்!**
**தலைவர்களின் இலட்சியத்தை நாடுவோம்!**
**தமிழ்வாழ்க! வெல்க! வென்றே ஆடுவோம்!**

இரவல்பெற்ற இதயம்தன்னை அண்ணன் இடத்திலே
எடுத்தளித்தே உறங்கும்நம் கலைஞர் தடத்திலே
அரியகடன் நிறைவேற்றி “முதல்வர்” உழைக்கிறார்!
அனைவருமே வருக!வென அன்பால் அழைக்கிறார்!

அஞ்சுகத்தாய் முத்துவேலர் ஈன்ற புதல்வரை
ஐந்துமுறை தமிழ்நாட்டை ஆண்ட முதல்வரை
நெஞ்சில்வைத்துப் போற்றும்இந்த உலகம் உள்ளவரை!
நினைவிடத்தால் மிளிர்கிறதே அழகுக் கடற்கரை!



உடல்அளவே அவர்பிரிந்தார்! தமிழர் உயிரிலே
உணர்வினிலே கலந்திருப்பார் என்றும் நினைவிலே!
கடலலையின் தாலாட்டில் வளரும் கனவிலே
கண்துயில்வார் நம்கலைஞர் அண்ணன் அருகிலே!

**கலைஞர்இல்லை! அண்ணன்இல்லை! என்னும் துயரில்லை!**
**கண்முன்எங்கள் “தளபதியார்” அவர்கள் வடிவிலே!**
**அலைமுழங்கி வாழ்த்தொலிக்கும் எட்டுத் திக்கிலே!**
**“அண்ணன்தம்பி” பாசம்பொங்கும் நினைவி டத்திலே!**

**முருக்கவிழும் “தளபதி”யின் சிரிப்பில் தெரிவார்!**
**முத்தமிழ் அறிஞர்,நம்முன் நித்தம் வருவார்!**
**தரைக்கடியில் இருந்தாலும் உள்ளம் நெகிழ்வார்!**
**“தற்காலம் பொற்காலம்” என்று மகிழ்வார்!**

கண்ணிமைபோல் காவல்கொண்டு தடைகள் நீக்கியே
கடமைசெய்தார் தமிழினத்தைத் தோளில் தூக்கியே!
அண்ணனுடன் நம்கலைஞர் நினைவு தேக்கியே
அத்தனைத் திசைகளுமே சென்னை நோக்கியே!

பொலிவுற மின்னும் கலைஞர் நினைவிடம்
புதுப்பிக்கப் பட்ட அண்ணா நினைவிடம்
தலைவர் “தளபதி” திறந்து வைத்திடும்
தனிப்பெரும் நிகழ்ச்சி சரித்திரப் புகழ்பெறும்!

**கலைஞர், அண்ணா திருப்புகழைப் பாடுவோம்!**
**கடற்கரையில் சென்னையிலே கூடுவோம்!**
**தலைவர்களின் இலட்சியத்தை நாடுவோம்!**
**தமிழ்வாழ்க! வெல்க!வென்றே ஆடுவோம்!**



**- கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**